(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 158.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 ஜூன் 24, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1503/2025

கௌரவ பீ. ஆரியவங்ஷ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை இலங்கையில் மிளகுச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலப்பரப்பு மற்றும் மிளகு உற்பத்தி என்பன ஒவ்வொரு ஆண்டு வாரியாகவும், மாவட்ட ரீதியாகவும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் மிளகு ஏற்றுமதி மூலம் ஈட்டிய வருமானம் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மிளகுச் செய்கையாளர்களை மேலும் ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1546/2025

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தோட்டப்புறங்களில் உள்ள லயன் வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி லயன் வீடுகளில் வாழ்வதற்கு உகந்த சூழல் காணப்படுவதை உறுதிப்படுத்துவதற்குரிய பரிசீலனை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) உரிய பெருந்தோட்டக் கம்பனிகள் மேற்படி லயன் வீடுகளை உரிய முறையில் பராமரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனவா என்பதையும்;

(iv) உரிய முறையில் பராமரிக்கப்படாதுள்ள லயன் வீடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1637/2025

கௌரவ ருவன் விஜேவீர,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'செமட செவன' கருத்திட்டத்தின் கீழ், மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை மற்றும் முழுமையாக பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இந்த கருத்திட்டத்திற்கான நிதி மூலம் யாதென்பதையும்;

(iii) இந்த வீடமைப்புத் திட்டத்திற்காக பயனாளிகளைத் தெரிவு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(iv) இந்த கருத்திட்டத்தின் கீழ், மொனராகலை மாவட்டத்தில் புத்தல பிரதேச செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) அதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை மற்றும் உண்மையில் செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1641/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் இயங்கும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய டிப்போக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி டிப்போக்களில் தற்போது சேவையில் ஈடுபடுத்தக்கூடிய நிலையில் காணப்படுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் நிலவும் ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) திருகோணமலை மாவட்டத்திலுள்ள டிப்போக்களின் பேருந்துகளையும் மனித வளத்தையும் மேம்படுத்துவதற்கு இற்றைவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1673/2025

கௌரவ எம்.எஸ். அப்துல் வாசித்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சின்ன உல்லை, அறுகம்பே, சர்வோதயபுரம், ஜலால்தீன் சதுக்கம், குடாக்கள்ளி, விஸ்கி பொயின்ட், கொட்டுக்கல் மற்றும் லைட் ஹவுஸ் போன்ற சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா விடுதிகளை நடத்துபவர்களின் காணிகளுக்கு அரசாங்கம் சரியான முறையில் நில அளவீடுகளை செய்து உறுதிகளை வழங்கவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அத்தகைய ஆவணங்கள் இல்லாத சுற்றுலா விடுதிகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்ய முடியாது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) அதன் காரணமாக, பொத்துவில் பிரதேச சபைக்கு ஏற்புடைய வியாபார வரிகளை அறவிட முடியாமல் உள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், பிரதேச செயலாளரின் அனுமதியின் கீழ் தனியார் நில அளவையாளர்கள் மூலம் நில அளவை செய்து 'உருமய' உறுதிகளை விரைவாகப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்க முடியுமா என்பதையும்;

(v) அவ்வாறு நில அளவையாளர்களால் தயாரிக்கப்படும் வரைபடத்தைப் பயன்படுத்தி அந்தக் காணிகளை 'உருமய' திட்டத்தில் சேர்க்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1831/2026

கௌரவ கந்தசாமி பிரபு,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 2025/2026 ஆண்டிற்கென முன்மொழியப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் வலயத்தின் தற்போதைய நிலைமை யாது;

(ii) கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மட்டக்களப்பு கிளையினூடாக இவ்வருடத்தில் தொழில்நுட்பப் பயிற்சி பெற்றுள்ள உள்ளூர் தொழில்முயற்சியாளர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தறித் தொழில் களுக்கான சந்தை வாய்ப்புக்களை இலகுபடுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்காக வழங்கப்பட்டுள்ள குறைந்த வட்டி வீதத்திலான கடன்களின் மொத்தப் பெறுமதி யாது;

(v) கிழக்கு மாகாணத்தில் விவசாய உற்பத்தி சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்கு விசேட வரிச் சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(vi) மட்டக்களப்பு மாவட்டத்தில் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள தொழில்முயற்சியாளர்களுக்கான 'SME பிணை நிதியத்தின்' தற்போதைய முன்னேற்றம் யாது;

(vii) மேற்படி மாவட்டத்தில் பிராந்திய பொதியிடல் மத்திய நிலையமொன்றை அமைப்பதற்கான திட்டம் ஏதேனும் உள்ளதா;

(viii) இறக்குமதி மாற்றீடுகளிலிருந்து உள்ளூர், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1920/2026

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ டி சில்வா,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அங்கம்பிட்டிய வீதி, எத்துல்கோட்டை மற்றும் பாடசாலை வீதி, இராஜகிரிய ஆகியவற்றை நாவலையில் இணைத்து இராஜகிரிய, நாவல கால்வாய்க்கு குறுக்கே புதிய பாலமொன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை அவர் அறிவாரா;

(ii) மேற்படி பாலம் நிர்மாணிக்கப்படும் பிரதேசமானது உயிரியல் பல்வகைத்தன்மை மற்றும் தொல்பொருளியல் ரீதியில் மிகவும் கூறுணர்வுமிக்கதொரு வலயம் என்பதை அவர் அறிவாரா;

(iii) ஆமெனில், மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான சூழல், போக்குவரத்து நெரிசல், சமூக – பொருளாதார மற்றும் தொல்பொருளியல் சார்ந்த தாக்க அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1993/2026

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாகாண சபைகளின் கீழ் இயங்கும் மாகாண அரச சேவையில் கணிசமான எண்ணிக்கையிலான அரச உத்தியோகத்தர்கள் உள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) வடமேல் மாகாண அரச சேவைக்கு அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அச்சேவையில், தற்போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவிக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) தற்போது நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும், பணிகளை முறைப்படுத்துவதற்கும் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சிறப்புரிமை (இல. 1),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள், தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2026 மே 21 ஆம் திகதி சிறப்புரிமை கேள்விகளின் கீழ் பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

2.

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சிறப்புரிமை (இல. 2),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ்.எம். மரிக்கார் அவர்கள், தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2025 நவம்பர் 13 ஆம் திகதி சிறப்புரிமை கேள்விகளின் கீழ் பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

3.

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சிறப்புரிமை (இல. 3),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா அவர்கள், தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2026 ஜூன் 10 ஆம் திகதி சிறப்புரிமை கேள்விகளின் கீழ் பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

வலுசக்தி அமைச்சர்,— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 1(2) ஆம் பிரிவின் கீழ் அப்போதைய வலுசக்தி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2026 மாச்சு 05 ஆம் திகதிய 2478/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.06.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47 ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2026 ஏப்ரல் 11 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2026.06.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*10.

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

நிதி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— “2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக.” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

13.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

கோதாகொட குணரதன நாஹிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

887/2025

கௌரவ (கலாநிதி) எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணியற்ற மக்கள் தங்களுக்குக் காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக 2017.01.01 முதல் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதிக்குள் ஏறாவூர்பற்று, செங்கலடி பிரதேச செயலகத்தில் விண்ணப்பித்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு அளிப்புப் பத்திரம் அல்லது காணி உரிமம் வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏறாவூர்பற்று, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச காணிகளில் குடியிருப்பவர்களில் பலருக்கு இன்று வரை அளிப்புப் பத்திரம் அல்லது காணி உரிமம் வழங்கப்படாதுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு இதுவரை காணி உறுதி அல்லது காணி உரிமம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

888/2025

கௌரவ (கலாநிதி) எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2025.03.31 வரையில் ஏறாவூர்ப்பற்று, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவில் 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியினுள் குறிப்பிட்ட நபர்களுக்கு 'உருமய' அறுதி உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அவர்களுக்கு இதுவரை 'உருமய' அறுதி உறுதி வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

889/2025

கௌரவ (கலாநிதி) எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற 'அளிப்புப் பத்திரம்' அல்லது 'காணி உரிமம்' இல்லாது மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரசாங்க காணிகளில் மக்கள் குடியிருக்கின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அரசாங்க காணிகளிலிருந்து மேற்குறிப்பிட்ட ஆட்களை சட்டரீதியாக வெளியேற்றுவதற்கு 2017.01.01 தொடக்கம் 2025.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஏற்புடைய பிரதேச செயலாளர் அவர்களுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(v) வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்களில் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளுக்கமைய அரசாங்க காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(vi) வழக்குத் தாக்கல் செய்யவேண்டி இருப்பினும் ஏற்புடைய பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்படாத ஆட்கள் இருக்கின்றார்களா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(viii) குறிப்பிட்ட சிலருக்கு எதிராக மாத்திரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கும், கூடுதலான ஆட்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படாமைக்குமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

2058/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2025ஆம் ஆண்டு வரை ஒவ்வோர் ஆண்டிலும் இலங்கையில் —

(i) பதிவாகியுள்ள குழந்தைப் பிறப்புக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) குழந்தைப் பிறப்பு எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிநிலை ஒவ்வொரு வருடத்துடன் ஒப்பிடுகையில் சதவீதமாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் பிறப்பு எண்ணிக்கை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகின்றமை தொடர்பில் கண்டறியப்பட்டுள்ள காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) குழந்தைப் பிறப்புக்களின் எண்ணிக்கையில் பேணிச்செல்லப்பட வேண்டிய உகந்தப் பெறுமானம் யாதென்பதையும்;

(iii) பிறப்புகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, குழந்தைகளை எதிர்பார்க்கும் குடும்பங்களுக்கு ஏதேனும் நிவாரணம் அல்லது சலுகைகள் வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?